DEPOSITION OF WITNESS

IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, KAMUTHI.

Case No.CC 116/2021

Prosecution witness – PW.3

| | | | |
|---|---|---|---|
| Name | :திரு.பாலசுப்பிரமணி | Caste: | |
| Father's Name | :பெரியசாமி | Calling: | |
| Village | : | Religion: | |
| Taluk | : | Age: | |

18.05.2026 – 11.33 AM

எதிரி ஆஜர்.  எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.

<u>அரசு தரப்பில் முதல் விசாரணை</u>:–

1. நான் மீனாட்சிபுரம் கிராமத்தில் குடியிருந்து கூலி வேலை செய்து வருகிறேன். இவ்வழக்கில் இறந்துபோன வள்ளி ஊர்க்காரர் தான். அவர் ஏதோ விபத்தில் இறந்துவிட்டதாக ஊர்க்காரர்கள் கூறி தெரிந்து கொண்டேன். சுமார் 5 வருடங்களுக்கு முன்னர் போலீசார் என்னை மேற்படி வள்ளி இறந்தது சம்மந்தமாக விசாரிக்க வேண்டுமென்று கூறி காவல் நிலையத்திற்கு வருமாறு அழைத்தார்கள். அதனால் நான் காவல் நிலையம் சென்றேன். அப்போது போலீசார் என்னிடம் ஒரு வெள்ளை தாளில் கையொப்பம் பெற்றுக் கொண்டார்கள். என்னிடம் காட்டப்படும் பார்வை மகஜரில் உள்ள முதலாவது கையொப்பம் என்னுடையது தான். அந்த **கையொப்பம் மட்டும் அ.சா.ஆ.2 ஆக** குறியீடு செய்யப்படுகிறது.  போலீசார் என்னை விசாரிக்கவில்லை.

(அரசு தரப்பில் மேற்படி சாட்சியை பிறழ் சாட்சியாக பாவித்து குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கோரியதின் பேரில் அனுமதியளிக்கப்பட்டது)

<u>அரசு தரப்பில் குறுக்கு விசாரணை</u>:–

கடந்த 22.04.2021 ம் தேதி 18.35 மணிக்கு நான் வழக்கு சம்பவ இடத்தில் இருந்த போது கமுதி போலீசார் சம்பவ இடத்தை பார்வையிட்டு தயார் செய்த பார்வை மகஜரில் நான் சாட்சி கையொப்பம் செய்ததாகவும், என்னுடன் முனியசாமி என்பவரும் சாட்சியாக கையொப்பம் செய்ததாகவும் போலீசார் விசாரித்த போது சொல்லிவிட்டு தற்போது எதிரி  கேட்டுக்கொண்டதன் பேரில்

பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

THANGA KARTHIKA

Digitally signed by THANGA KARTHIKA
Date: 2026.05.18 16:35:27 +0530